பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

21 08 2024 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தரமான கல்வியை உறுதி செய்வதில், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
2. பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப்பயணமாக போலந்து சென்றடைந்தார்.
3. விண்வெளிசார் பொருளாதாரம் அடுத்த பத்தாண்டுகளில் ஐந்து மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
4. தேசிய வாழை ஆராய்ச்சி மையம் காவிரி காஞ்சன் என்ற புதிய வாழை ரகத்தை வெளியிட்டுள்ளதாக அதன் இயக்குனர் டாக்டர் செல்வராஜன் கூறியுள்ளார்.
5. ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Patri** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<<>>>>>>

தரமான கல்வியை உறுதி செய்வதில், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம் ஃபரிதாபாதில் உள்ள ஜே சி போஸ் அறிவியல் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்துகொண்டு அவர் பேசினார்.

இதனை கருத்தில்கொண்டே புதிய தேசிய கல்விக்கொள்கையில் இவற்றுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

உலக அளவில் நான்காவது தொழில் புரட்சிக்கான அத்தியாயம் தொடங்கியுள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவும் இதனை எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கான இலக்குகளை எட்டுவதில் இந்த பல்லைக்கழகம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

நவீன அறிவியலின் தந்தை என போற்றப்படும் ஜெகதீஷ் சந்திரபோஸ் பெயரில் இந்த பல்கலைக்கழகம் செயல்பட்டு வருவது பெருமைக்குரியது என்றார்.

தாவரங்கள் மற்றும் செடி, கொடிகளுக்கும் உணர்வு உண்டு என்பதை அறிவியல் பூர்வமாக நிரூபித்த முதலாவது விஞ்ஞானி ஜெகதீஷ் சந்திரபோஸ் என்றும் திருமதி திரௌபதி முர்மு புகழாரம் சூட்டினார்.

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப்பயணமாக போலந்த் சென்றடைந்தார்.

**Warsaw** விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

45 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய பிரதமர் போலந்து செல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

போலந்து நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை யுக்ரைன் செல்கிறார்.

**<<<<<<<>>>>>>**

மின்னணு வர்த்தகத்தின் வளர்ச்சி மக்கள் நலனை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டியது அவசியம் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சிறு வணிகர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் இதன் வளர்ச்சி இருக்க வேண்டும் என்றார்.

**<<<<<<<>>>>>>**

விண்வெளிசார் பொருளாதாரம் அடுத்த பத்தாண்டுகளில் ஐந்து மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதலாவது தேசிய விண்வெளி தினம் வரும் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட உள்ளதை சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பான முக்கிய நிகழ்ச்சி புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் இதனை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தொடங்கிவைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்திரயான் விக்ரம் லேண்டர் கடந்தாண்டு ஆகஸ்ட் 23-ஆம் தேதி வெற்றிகரமாக நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கியதை குறிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுவதாகவும் அவர் கூறினார்.

விண்வெளி ஆராய்ச்சி தொடர்பாக மாணவர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் இது உதவிடும் என்று திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>**

அலுவலகங்களில் மகிழ்ச்சியான சூழல் நிலவுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்று மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெஹ்வால் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் பேசினார்

அனைவரும் சக ஊழியர்களிடம் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>

பெட்ரோலிய ரசாயனத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

அகமதாபாதில் நடைபெற்ற இதுதொடர்பான தொழில்துறை கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

ரசாயனம் மற்றும் பெட்ரோலிய ரசாயனத்துறையின் வளர்ச்சிக்கு தடையாக உள்ள அம்சங்கள் களையப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த துறையின் வளர்ச்சியில் குஜராத் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மருத்துவர்கள் அதனை கைவிட வேண்டும் என்று எயிம்ஸ் மருத்துவமனை கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்திருப்பதை சுட்டிக்காட்டியும், உச்சநீதிமன்றம் உறுதியளித்துள்ளதை கருத்தில்கொண்டும் மருத்துவர்கள் பணிக்கு திரும்ப வேண்டும் என்று புதுதில்லி எயிம்ஸ் மருத்துவமனை கேட்டுக்கொண்டுள்ளது.

சுகாதாரப்பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கென எயிம்ஸ் மருத்துவமனையும் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக்குழு, மருத்துவர்கள், நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களின் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்யும் என்றும் எயிம்ஸ் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

கொல்கத்தாவில் பயிற்சி பெண் மருத்துவரின் உயிரிழப்பு கொடுமையானது என்றும், அதற்கு போராடும் மருத்துவர்களை கொச்சைப்படுத்துவது கண்டிக்கத்தக்கது என்றும் பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சம்பவம் தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி தமது நிலைப்பாட்டை ஏன் தெரிவிக்கவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

தமிழகத்தில் பிஜேபி வேகமாக வளர்ந்து வருவதாகவும் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தேசிய வாழை ஆராய்ச்சி மையம் காவிரி காஞ்சன் என்ற புதிய வாழை ரகத்தை வெளியிட்டுள்ளதாக அதன் இயக்குனர் டாக்டர் செல்வராஜன் கூறியுள்ளார்.

திருச்சியில் உள்ள இந்த ஆராய்ச்சி மையத்தின் 31-ஆவது நிறுவன தினத்தையொட்டி, செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக விவசாயிகள் சாகுபடி செய்யும் வகையில் இந்த புதிய வாழை ரகம் வெளியிடப்பட்டுள்ளதாக கூறினார்.

மத்திய அரசின் தாவர வகைகள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமை பாதுகாப்பு தலைவர் திரு திரிலோச்சன் மொஹபத்ரா இதனை வெளியிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

காவிரி காஞ்சன் மற்றும் காவிரி வாமன் ரகங்களை மத்திய ரகங்களாக வெளியிட மத்தியக்குழுவுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

செவ்வாழை மற்றும் நெய்பூவன் போன்ற பாரம்பரிய ரகங்களை ஏற்றுமதி செய்வதற்கான தொழில்நுட்பங்களை வாழை ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

வாழையை அடிப்படையாக கொண்ட பத்துக்கும் மேற்பட்ட ப்ரோ பயோடிக் ஸ்மார்ட் உணவுகளை தேசிய வாழை ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ளதாகவும் டாக்டர் செல்வராஜன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதிகள் ஒன்பது பேர் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல், ஆந்திர உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதிகள் இருவரும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>

பீகாரிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவுள்ள தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில், முன்னாள் மத்திய அமைச்சரும், ராஷ்ட்ரிய லோக்மோர்ட்சா கட்சி தலைவருமான திரு உபேந்திர குஷ்வாஹாவும், பிஜேபி-யின் திரு மனன்குமார் மிஷ்ராவும் இன்று வேட்புமனு தாக்கல் செய்தனர்.

பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் மூத்த நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>>

ஹரியானா மாநில காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

தாய்லாந்தில் குரங்கு அம்மை ஒருவருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

காங்கோவில் பயணம் மேற்கொண்ட அவர், குரங்க அம்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட நபர் தனிமைப்படுத்தப்பட்டு உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும் மருத்துவர்கள் கூறினர்.

**<<<<<<<>>>>>>**

ரஷ்யாவின் வான் பகுதியில் கடந்த 24 மணிநேரத்தில் பறந்த உக்ரைனின் 45 ட்ரோன்கள் அழிக்கப்பட்டுள்ளதாக ரஷ்ய அரசு கூறியுள்ளது.

குறிப்பாக, மாஸ்கோ மாகாணப்பகுதியில் மட்டும் 11 ட்ரோன்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

**<<<<<<<>>>>>>**

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஆன்டனி பிளிங்கன் அரசு முறைப்பயணமாக எகிப்து சென்றடைந்தார்.

காஸா பகுதியில் சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கான சமரச பேச்சுக்களில் எகிப்து ஈடுபட்டுவருவதை சுட்டிக்காட்டியுள்ள திரு ஆன்டனி பிளிங்கன் இதற்காக அந்நாட்டு அதிபருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

**<<<<<<<>>>>>>**

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய ஜுனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Patri** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் **Chengdu**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-16, 21-15 என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் **Kuan Yi Lin**-ஐ வென்றார்.

மற்றொரு 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஒற்றையர் பிரிவில் **Shaina Manimuthu** -வும், 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஒற்றையர் பிரிவில் **Tanvi Reddy**-யும் **Parul Choudhary –** யும், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

17 வயதுக்கு உட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவில் மணீஷ் - அதிதீ இணையும், கிரண் - கீர்த்தி இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

15 வயதுக்கு உட்படோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Saipushkar**-ரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

---------

இந்தோனேஷியா சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Meiraba Luwang Maisnam** ஆடவர் ஒற்றையர் பிரிவிலும், **Dingku Singh – Priya** இணை மற்றும், **Ayush Agarwal – Shruti Misra** இணையும் கலப்பு இரட்டையர் பிரிவிலும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-----------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி இன்று பெரு புறப்பட்டு சென்றது.

------------------

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Sainath Pardhi** வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

----------------

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சத்தீஷ்குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<<END>>>>>>**